[14th November 1957

SRI V. K. RAMASWAMY MUDALIAR: I would like to know from the Hon. Minister whether these surveys are in any way useful to the ryots and, if so, how are these people benefited by these surveys?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Collection of statistics is a primary need for any planning and when these statistics are available, it is also useful to the ryots in the matter of agricultural production and in the matter of organization of small industries, and other things.

SRI V. K. KOTHANDARAMAN: *இந்த ராஜ்யத்தை ஐந்து சென்டர்களாகப் பிரித்து விலைவாசி புள்ளிவிவரம் தயாரிக்கப்படுகிறது. ஆனால் சென்னை விலைவாசி புள்ளிவிவரங்களைக்கொண்டே பஞ்சப்படி கொடுக்கப்படுகிறது. ஆனால் கடலூர் கோவை முதலியவற்றின் புள்ளி விவரம் அதிகமாக இருக்கிறது. அதனால் அந்தப் பிராந்தியத்தில் உள்ளவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகையால் ஜில்லாவாரியாகப் புள்ளி விவரம் தயாரித்து அதன் அடிப்படையில் பஞ்சப்படி கொடுக்க முயற்சி செய்யப்படுமா ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM: *இதைப்பற்றி தனியாகக் கேள்வி போட்டால் பார்த்து பதில் சொல்கிறேன்.*

Records about Poligars

* 163 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have all the records about Poligars who waged war against the British during 1709 to 1802; and

(*b*) whether the Government have got the complete historical records of Kattabomman, Oomaidurai, Veera Maruthu brothers and Pandians of Sivaganga?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) & (*b*) The Poligar war in the Southern districts against the British began in 1797 (and not in 1709) and ended in 1801. In fact, the connexion of the English with Tirunelveli and other Southern districts began in 1781 with the assignment of the Revenues of the Carnatic by the Nawab of Arcot. An account of the wars waged by Kattabomman, Oomadurai and Veera Maruthu brothers is given in Caldwell's History of Tirunelveli and in the Gazetteer of the Tirunelveli District, Volume I, by H. R. Pate. Official information about these wars of the Poligars against the British is contained in the Revenue Consultations and the Board's Consultations from 1797 to 1801. Except for the information contained in these records there are no other historical records relating to Kattabomman, Oomadurai, Veera Maruthu brothers and Pandians of Sivaganga available with the Government.

SRI N. K. PALANISAMI: *சர்க்கார் கட்டபொம்மன், ஊமைத்துறை, வீரமருது இவர்களுடைய சரித்திரத்தைப் பரிசீலனை செய்வதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?*

THE HON. SRI C. SUBRAMANIAM: *இப்போது ஒன்றும் அதுமாதிரி ஆலோசனையில் இல்லை.*

14th November 1957]

Sri V. K. KOTHANDARAMAN : பாரதியார் பாடல்களை மலிவு விலையில் வெளியிட்டிருப்பது போல், கட்டபொம்மன், ஊமைத்துரை போன்றவர்களுடைய வீர சரித்திரத்தையும் மலிவு விலையில் அச்சிட்டு சர்க்கார் வெளியிடுவார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்போது இருக்கக்கூடிய ரெகார்டுகளைக்கொண்டு சரித்திரத்தை எழுதினால் அது பிரசுரிப்பதற்குத் தகுந்ததாகவே இருக்காது, என்று கருதுவேன்.

Sri K. VINAYAKAM : As these records were prepared and manufactured by the then British rulers who are liable to take a partisan view, will the Government be pleased to constitute a small committee of experts on the subject to go into the history of these patriots who waged war against the early British settlers?

The Hon. Sri C. SUBRAMANIAM : The only records available are those kept by the Britishers. I do agree that they are one-sided and they give a distorted picture of the incidents that took place then. But unfortunately, we are not accustomed to keep any records of the various events taking place in the country. That is why I say it may not serve any useful purpose to have an expert committee whatever may be the nature of the experts composing the committee.

Sri M. JAGANNATHAN : தலைவர் அவர்களே, ஒரு சாரார் கட்டபொம்மன் அவர்களை தமிழர் இனத்தைச் சேர்ந்தவர் என்றும், மற்றொரு சாரார் தெலுங்கர் இனத்தைச் சேர்ந்தவர் என்றும் சொல்லுவதினால் அபிப்பிராய பேதம் இருந்து வருகிறது. அவர் தமிழரா, தெலுங்கரா என்கிற விளக்கத்தைக் கொடுக்க சர்க்கார் முன் வருமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : என்னிடத்தில் அத்தகைய விளக்கம் கூற எந்தவிதமான ஆதாரமும் இல்லை. அதை அவரவர்கள் சண்டைபோட்டுத் தெரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

Sri T. L. SASIVARNA THEVAR : வீரபாண்டிய கட்டபொம்மன் இவர்களைச் சார்ந்த பாளையக்காரர்களில் எத்தனை சாதியார்கள் இருந்திருக்கிறார்கள் ? எந்த எந்த வகுப்பினரைச் சேர்ந்தவர்கள் அந்தப் பாளையக்காரர்கள் என்று தெரிவிக்க முடியுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : என்னிடத்தில் ரெகார்டு இருக்கிறதென்று தெரிவித்தேன். இஷ்டப்பட்டால் அதைப்பார்த்து அவர்களே புள்ளிவிவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

Sri A. V. P. ASAITHAMBI : 1797-ல் இருந்து 1801 வரையில் தமிழ்நாட்டில் ஆங்கில ஆதிபத்யத்தை எதிர்த்து சுதந்திரப் போராட்டம் நடந்திருக்கிறது என்பதனால் முதல் சுதந்திரப் போர் 1857-ம் வருஷம் என்று மத்திய சர்க்கார் தீர்மானித்திருப்பதை இவர்கள் ஆட்சேபிப்பார்களா? நம்முடைய சுதந்திரப் போராட்ட காலத்தை வற்புறுத்துவார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : 1857-ல் நடந்த நிகழ்ச்சி ஒரு சரித்திர சம்பந்தமானது. அதற்கு முன்பே சுதந்திர எழுச்சி மக்களிடத்தில் இல்லை என்று சொல்ல முடியாது. அன்னிய ஆதிக்கம் ஏற்பட்ட முதலிலிருந்தே சுதந்திர எழுச்சி ஏற்பட்டிருக்கிறது. அதற்கு 1857-ம் வருஷம் சுமுகமாக வந்து அமைந்ததே தவிர வேறு ஒன்றும் இல்லை.

Sri K. RAMACHANDRAN : அந்நிய நாட்டு ஆதிக்கத்தை எதிர்த்து நடந்த சுதந்தரப் போராட்டத்தைப் படம் எடுத்த மத்திய சர்க்கார் தென்பிராந்திய சுதந்திரப் போராட்ட நினைவுக்களை அதில் சேர்க்காததன்

[14th November 1957

காரணமாக அந்தப் படம் இப்போது வாபஸ் பெறப்பட்டிருக்கிறது. இந்தக் காரணத்தைக்கொண்டாவது இந்த வீரர்களுடைய சரித்திரத்தை ஆராய்வ தற்கு சர்க்கார் முயற்சி எடுத்து ஆவன செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : That is a suggestion for action. I do not think it is a question, Sir.

MR. SPEAKER : The Hon. Minister is at perfect liberty not to answer it.

SRI N. K. PALANISAMI : வீரபாண்டியக் கட்டபொம்மன் ஆங்கில ஆதிபத்யத்தை எதிர்த்து **1797—1801** வரையில் நடத்திய போராட்டம் பற்றிய சரித்திரத்தை சர்க்காரே எழுதுவதற்கு முன் வருவார்களா ?

MR. SPEAKER : அவர் ரெகார்டுகளை வேண்டுமானுல் கொடுப்பதாகச் சொல்கிருர்கள். நீங்களே அதைப்படித்து எழுதலாம்.

Fountain pen nib industry

*164 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. Minister for Industries be pleased to state the nature of the assistance the fountain pen nib industry at Sattur is receiving from the Government?

THE HON. SRI R. VENKATARAMAN : No application for financial assistance was received till now and therefore no financial assistance has been given by the Government to this industry at Sattur. But one of the four firms which are manufacturing nibs at Sattur has been granted import licence to import raw materials (stainless steel) from Canada.

SRI K. SATTANATHA KARAYALAR : சாத்தூர் தொழிற்சாலையில் செய்யப்படுகிற நிப்புகளில் " மேட் இன் யு. எஸ். ஏ. " என்று இருப்பதாகச் சொல்லப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த நிப்புகளில் " மேட் இன் யு. எஸ். ஏ. " என்று இல்லை, வெறும் யு. எஸ். ஏ. என்றுதான் இருக்கின்றன. இதைப் பற்றிக் கேட்டால் ஒரு கம்பெனி " யுனைட்டெட் சேல்ஸ் அசோசியேஷன் " என்பதாகவும், மற்றொன்று " உமா சங்கர் ஏஜென்ஸி " என்றும் பெயர் இருப்பதனுல்தான் " யு. எஸ். ஏ. " என்று போட்டிருப்பதாகச் சொன்னுர்கள்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. Minister tell us what happened to the industry started at Guindy to manufacture Parker pens and Parker ink?

THE HON. SRI R. VENKATARAMAN : That is a separate question and I will answer it if it is separately put.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, அரசாங்கத்தினுடைய பணி மனைகளில் தமிழ்நாட்டில் தயாரிக்கப்படுகிற நிப்புகளை உபயோகிக்கப் படுகிறதா ? இந்த நிப்புகள் பம்பாயிக்கு அனுப்பப்பட்டு, அங்குள்ள பெரிய வியாபாரிகளால் மறுபடியும் தமிழ்நாட்டில் கொண்டுவந்து விற்பனை செய்யப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா ? இப்படி இல்லாமல் இங்கேயே அதிகம் உபயோகப்படுத்துவதற்கு அரசாங்கம் ஏதேனும் முயற்சி செய்துள்ளதா ?